# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT  அங்கீகாரம் பெற்றது  இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529  Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574  coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 18/2013**  **நாள் : 05/06/2013**

***பெறுநர்***
***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பார்ந்த தோழரே, வணக்கம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் 2013 ஜுன் 2, 3 தேதிகளில் கடலூரில் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிஐடியு வின் துணை பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர், தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் சங்கத்தின் பொருளாளர் தோழர் ஈ. அந்தோணி, துணைப் பொதுச்செயலாளர்கள் தோழர்கள் எம். வெங்கடேசன், எஸ். இராஜேந்திரன் மற்றும் வி. இளங்கோ உள்ளிட்ட 63 தோழர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மத்திய சென்னை, தர்மபுரி, கன்னியாகுமரி, கோவை மாநகர், திருப்பூர், உடுமலைபேட்டை, சேலம், மேட்டூர், கோபி, நாமக்கல் போன்ற திட்டங்களிலிருந்தும், காடம்பாறை, நெல்லை, குந்தா, வடசென்னை அனல் போன்ற உற்பத்தி வட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

சிஐடியு வின் துணை பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தனது உரையில் சிஐடியுவின் அகில இந்திய மாநாட்டு முடிவுகள் சிஐடியுவின் மாநாட்டு நிகழ்வுகளாக தலைவர் உரை, ஸ்தாபன அறிக்கை போன்றவை விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டதோடு, 4 சிறப்பு அமர்வுகளும் நடத்தப்பட்ட விதத்தையும் விளக்கினார். தீண்டாமைக்கு எதிராக தொடர் இயக்கம் நடத்துவது சம்மந்தமாகவும், மத்தியில் ஆளுகின்ற அரசு உழைப்புச் சுரண்டல், பென்சன், பி.எப்., அனைத்தும் கபளீகரம் செய்ய முயற்சி எடுக்கிறது என்று விளக்கியதோடு அரசு உலக நவீனமயக் கொள்கை தவறாவது என உணர ஆரம்பித்துள்ளது சம்மந்தமாக விளக்கினார். இதற்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தை முழுமையாக திரட்ட வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார். மேலும் மத்தியில் ஆளும் அரசு தொழிலாளர் நல திட்டங்களை மாற்றுவது. பணப்பலன்களை பறிப்பது, பொதுத்துறை பங்குகளை விற்பது, இயற்கை வளங்களை தனியாருக்கு விற்பது போன்ற தவறான கொள்கைகளை இந்திய அரசு கடைபிடித்து வருவதையும் சுட்டிக்காட்டினார்.

இந்திய சுதந்திரத்திற்கு பிறகு அனைத்து தொழிற்சங்கங்களும் கூட்டாக 2013 பிப்ரவரி 20, 21-ல் நடத்திய அகில இந்திய வேலை நிறுத்தம் அதில் மத்திய அமைப்பின் பங்கு சம்மந்தமாகவும், குறிப்பிட்டதோடு 2013 ஆம் ஆண்டு இறுதியிலோ அல்லது 2014 ஆம் ஆண்டிலோ நடைபெற உள்ள தேர்தல் களம் சம்மந்தமாகவும் நாம் ஆற்ற வேண்டிய பணிகளையும் குறிப்பிட்டு இவைகளை எல்லாம் நாம் சந்திக்க நமது ஸ்தாபன பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மத்திய அமைப்பின் மாநில தலைவர் தனது உரையில் இந்திய நாடு முழுவதும் நடைபெறுகின்ற ஊழல்கள் சம்மந்தமாகவும், மத்திய அரசின் முதலாளிகளுக்கு சேவை செய்யும் போக்கினையும் குறிப்பிட்டதோடு மின்சாரம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும், உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும்,

அது அனல் மின் நிலையத்தால் மட்டுமே சாத்தியம் என்றார். தனியாருக்கு நிலக்கரியை வெட்டி எடுக்கும் பணியை ஒப்படைத்து அதனால் பெரும் முதலாளிகளை வளர்க்கும் போக்கினை தான் மத்திய அரசு எடுத்து வருகிறது. மாநில அரசைப் பொருத்த வரையில் மத்திய அரசிற்கு எதிராகத்தான் செயல்படுகிறது. நெய்வேலி பங்கு விற்பனையை எதிர்த்து நடத்தும் இயக்கங்கள், நெய்வேலி அனல் மின்சார ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் சம்மந்தமாக நீதிமன்ற தீர்ப்பு, அதை அமலாக்குவதில் ஏற்படும் காலதாமதம் போன்றவைகளையும் குறிப்பிட்டதோடு மின் வாரிய பிரச்சனைகளையும் குறிப்பிட்டு உரையாற்றினார்.

அதன் பின்னர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன் சென்ற மாநில செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் மின் அரங்கத்தில் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாக குறிப்பிடும் போது பிப்ரவரி 20, 21 இல் நடைபெற்ற 48 மணி நேர வேலை நிறுத்தம் சம்மந்தமாகவும் 5.3.2013 அன்று மின் வாரிய ஊழியர்களின் கோரிக்கைகளை முன் வைத்து மத்திய அமைப்பு நடத்த இருந்த 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீடு. அது சம்மந்தமாக மாநிலம் முழுவதும் நடைபெற்ற பணிகள், கோரிக்கைகளை வாரிய தலைவருக்கு அளித்து நடத்திய பேச்சு வார்த்தை, பேச்சு வார்த்தையினையொட்டி பல கோரிக்கைகள் நிறைவேற்றம், அவைகளை பரிசீலித்த மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் 5.3.2013 இயக்கத்தை தள்ளிவைத்தது. இடையில் நடைபெற்ற ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை இவைகளை மையமாக வைத்து பிப்ரவரி 16,17 தேதிகளில் வட்ட வாரியாக நடைபெற்ற பேரவைகளில் ஊழியர்கள் கலந்து கொண்டது சம்மந்தமாகவும் விளக்கிய தோடு, மின் வாரிய காலிபணி இடங்களை நிரப்புவதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு எடுத்த நடவடிக்கை, அதனால் ஏற்பட்ட முன்னேற்றம் போன்றவைகளை விளக்கியதோடு, மஸ்தூர்களை கள உதவியாளர்களாக நியமித்தல், விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம், ஒப்பந்த தொழிலாளர்களின் வைப்பு நிதிக்கான பிடித்தத்திற்கு வழக்கு 10500 மஸ்தூர்களை கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கின்ற அதே நேரத்தில் 4000 ஐடிஐ படித்தவர்களை வேலை தேடி தரும் அலுவலகம் மூலமாக நிரப்புவதற்குண்டான நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சுணக்கத்தை களைந்து உடனடியாக பணி நியமனம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும், அது சம்மந்தமாக வாரிய தலைவரோடு நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் விபரத்தையும் விளக்கினார்.

சிஐடியு வின் அகில இந்திய மாநாட்டில் மத்திய அமைப்பிற்கு ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகள் முழுமையாக கலந்து கொண்டதை விளக்கியதோடு மாநாட்டிற்கு பின்னர் அமைக்கப்பட்ட கேட்டகிரி குழுக்களான கணக்கீட்டுப்பிரிவு, கள பிரிவு, ஒப்பந்த தொழிலாளர்குழு, பொது கட்டுமான வட்டம், சிவில், பண்டக சாலை பிரிவு குழு, அனல் புனல் ஆலோசனை குழு நடைபெற்ற விபரங்களையும், மீதமுள்ள, குழுக்களான உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு, கணக்குப் பிரிவு குழு மற்றும் நிர்வாகப்பிரிவு குழு கூட்டங்கள் நடத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கியதோடு, உறுப்பினர் சேர்ப்பு, கூட்டுறவு நாணய சங்க தேர்தல், அதில் நமது வெற்றி, சர்வதேச பெண்கள் தினம், டி.ஆர்.இ.யூ. தொழிற்சங்க அங்கீகார தேர்தல் பணி போன்றவைகள் சம்மந்தமாக குறிப்பிட்டு வேலை அறிக்கையை முன் வைத்தனர்.

33 தோழர்களின் நீண்ட விவாதத்திற்கு பின்னர் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. நவீன மயமாக்கல் கொள்கையின் ஒரு பகுதியான பொதுத்துறை பங்குகளை விற்பது என்ற முறையில் மத்திய அரசு நெய்வேலி நிலக்கரி நிறுவன 10 சதவீத பங்குகளை விற்பதை உடனடியாக கைவிட வேண்டும்.

2. 2013 பிப்ரவரி 20, 21 தேதிகளில் நடைபெற்ற நாடு தழுவிய மகத்தான வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாத மாநில நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள் இருப்பார்களேயானால் அவர்களை அப்பொறுப்புகளில் இருந்து விடுவிக்கச் செய்வது.

3. திட்டமிடுகின்ற சிறப்பு பேரவைகளை எல்லா திட்டங்களிலும் முறையாக நடத்துவதற்குண்டான முயற்சியை எடுப்பது.

4. **மின்வாரிய ஊழியர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகளான.**

அ) வேலை பளுவற்ற ஊதிய உயர்வை வழங்கிட வலியுறுத்துவது

ஆ) காலி பணி இடங்களை நிரப்புவதில் ஒரு அம்சமாக உள்ள 4000 ஐடிஐ படித்தவர்களை கால தாமதமின்றி பணி நியமனம் செய்ய வைப்பது.

இ) 10500 மஸ்தூர்களை உடனடியாக ஒப்பத்தின் அடிப்படையில் கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கச் செய்வது.

ஈ) கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு அளிக்கச் செய்வது.

உ) கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை கள உதவியாளர் மற்றும் மீட்டர் ரீடர்களுக்கு அடுத்த பதவி உயர்வுக்கு 5 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதை உடனடியாக மாற்றி அமைப்பது.

ஊ) பயிற்சியாளர் முறையை முற்றிலுமாக அகற்றுவது பயிற்சி காலத்தில் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி அளிக்க செய்வது.

எ) விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளிகளை அடையாளங்கண்டு பணி நிரந்தரம் செய்ய வைப்பது.

ஏ) 2010 - 2011, 2012 ஆம் ஆண்டுகளுக்கு நடைமுறையில் உள்ள பணி பங்கீடு அடிப்படையில் புதிய பதவிகளை வழங்கிட செய்வது.

போன்ற கோரிக்கை முன் வைத்து 4.7.2013 அன்று மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்துவது.

5. கூட்டுறவு நாணய சங்க தேர்தலில் இயக்குநர்களாக, உதவி தலைவர்களாக, தலைவர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அவர்களின் செயற்பாட்டிற்கு வழிகாட்டுகின்ற வகையில் ஒரு நாள் பயிற்சி முகாம் ஜுன் மாத இறுதியில் நடத்துவது.

6. **EEFI - அகில இந்திய மாநாடு**

அ) இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய மாநாட்டை 2013 ஆகஸ்டு 10, 11, 12 ஆகிய தேதிகளில் காஞ்சிபுரத்தில் நடத்துவது அதற்கான நிதியில் ஒரு பகுதியை காஞ்சி, செங்கை வட்டங்கள் வசூலிப்பதோடு, தமிழகம் முழுவதும் உள்ள கிளைகள் நிதி வசூலை செய்து மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆ) இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய மாநாட்டையொட்டி சென்னையில் ஒரு கருத்தரங்கம் நடத்துவது என்றும் அக்கருத்தரங்கில் தொழில் நுட்ப வல்லுநர்கள், வாரிய அதிகாரிகள், நமது இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் கலந்து கொள்ளச் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இ) மாநாட்டு நிதி, மாநாட்டு செலவுகளை ஈடுகட்டும் வகையில் மாநாட்டு நிதியை ஊழியர்களின் விருப்பத்தை பெற்று அவர்களின் ஊதியத்தில் ரூபாய் 300/- ஐ வாரியம் மூலமாக பிடித்தம் செய்து வசூலிப்பது. இவை தவிர உறுப்பினர் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்பட்ட கோட்டாவை பொது நிதி வசூல் மூலம் நடத்தி முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. வட்ட வாரியான நிதி வசூல் கோட்டா இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கிளைகளில் இருந்து வசூலிக்கும் நிதியில் 25 விழுக்காடு மாநாட்டு செலவுகளுக்காக கிளைகளுக்கு அளிப்பது.

(பொது நிதி வசூலுக்கான ரசீது புஸ்தகங்கள் மாநில மையத்தில் இன்னும் சில தினங்களில் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.)

7. அ) கேட்ட கிரி வாரியான குழு கூட்டங்களில் இறுதிப்படுத்தப்பட்ட கோரிக்கைகளை வாரியத்திற்கு அளித்து பேச்சு வார்த்தை நடத்துவது பேச்சுவார்த்தையில் ஏற்படும் முன்னேற்றங்களை பரிசீலித்து இயக்கத்திற்கு செல்வது.

ஆ) திட்ட மட்டத்தில் கேட்டகிரி வாரியான குழுகூட்டங்களை அமைப்பது, செயல்பட வைப்பது.

இ) உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு, கணக்குப் பிரிவு குழு, நிர்வாகக்குழு, ஆகிய குழு கூட்டங்களை ஜூலை 15 க்குள் நடத்தி முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

8. அ) 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தும் வகையில் ஜூன் மாதம் 15 ஆம் தேதிக்குள் வசூலிக்கும் சந்தாக்களை உடனடியாக அனுப்புவது.

ஆ) 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலை (2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு) ஆகஸ்ட்டு 30ந் தேதிக்குள் முடிப்பது. மீதமுள்ள மாதங்களில் புதிய உறுப்பினர் சேர்ப்புக்கு முயற்சிப்பது.

இ) கணக்கீட்டு பிரிவு, மஸ்தூர்கள், கள உதவியாளர்கள், பகுதி நேர ஊழியர்கள், ஆகிய பகுதிகளில் உள்ள ஊழியர்கள் மத்தியில் தனி கவனம் செலுத்தி உறுப்பினர் சேர்ப்பை நடத்துவது.

9. அ) விடுபட்டு போன ஒப்பந்த தொழிலாளர்கள் சம்மந்தமாக மேல் முறையீடு செய்வது.

ஆ) உற்பத்தி வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்கள் பட்டியலை சேகரிப்பது.

10. 2013 ஆம் ஆண்டு பேரவையை நடத்தாத கிளைகள் உடனடியாக பேரவையை நடத்தி முடிப்பது.

11. 2010 -ம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்காத கிளைகள் இனியும் காலதாமதமின்றி உடனடியாக தணிக்கையை முடித்து அறிக்கையை மாநில மையத்திற்கு அனுப்பி வைப்பது.

தோழர்களே எடுத்த முடிவுகளை முழுமையாக அமல்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். மிக குறுகிய கால இடைவெளியில் மாநில செயற்குழுவை நடத்திய கடலூர் மின்வட்டக்கிளைக்கு மத்திய அமைப்பு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு:**
தமிழக உழைப்பாளி மக்களின் வர்க்கப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதிலும், மத்தியதர ஊழியர்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் பெண்கள் என சமுதாயத்தின் பல்வேறு பகுதி மக்களின் போர் வாளாக திகழும் தீக்கதிர் நாளிதழின் ஐம்பது ஆண்டு நிறைவு பொன் விழாவின் நிறைவு விழா மதுரையில் நடைபெறுவதையொட்டி மலர் ஒன்று வெளி வர உள்ளது. அம்மலர் சிறப்பாக வெளிவரும் வகையில் அனைத்துகிளைகளிலும் ஒரு பக்கம், அரைபக்கம், கால்பக்கம், கிளையின் வசதிக்கேற்ப அவசியமாக விளம்பரம் தந்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம். அதன் விபரத்தை மாநில மையத்திற்கு அனுப்பி வைத்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## அகில இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பு 7வது மாநாடு, காஞ்சிபுரம்

### கிளைகளுக்கான நிதி வசூல், கருத்தரங்கம், ஊர்வலத்தில் பங்கேற்போர் விவரம்

| வ எண் | கிளையின் பெயர் | மாநாட்டு நிதி வசூல் ஒதுக்கீடு | ஊர்வலத்தில் பங்குபெற வேண்டிய தோழர்கள் | கருத்தரங்கில் பங்கேற்போர் |
|---|---|---|---|---|
| 1. | வடசென்னை | 3,00,000 | 500 | 100 |
| 2. | மத்திய சென்னை | 3,00,000 | 500 | 100 |
| 3. | மேற்கு சென்னை | 3,00,000 | 500 | 100 |
| 4. | தென்சென்னை | 3,00,000 | 500 | 100 |
| 5. | செங்கல்பட்டு | 10,00,000 | 400 | 75 |
| 6. | காஞ்சிபுரம் | | 700 | 75 |
| 7. | வேலூர் | 50,000 | 200 | 25 |
| 8. | திருப்பத்துார் | 1,00,000 | 300 | 25 |
| 9. | தர்மபுரி | 2,00,000 | 300 | 25 |
| 10. | விழுப்புரம் | 2,00,000 | 500 | 50 |
| 11. | கடலூர் | 2,00,000 | 500 | 50 |
| 12. | திருவண்ணாமலை | 3,00,000 | 500 | 50 |
| 13. | பெரம்பலூர் | 50,000 | 200 | 5 |
| 14. | திருச்சி/மாநகர் | 50,000 | 200 | 10 |
| 15. | கரூர் | 50,000 | 200 | 10 |
| 16. | புதுக்கோட்டை | 50,000 | 200 | 10 |
| 17. | தஞ்சாவூர் | 50,000 | 200 | 10 |
| 18. | நாகப்பட்டிணம் | 50,000 | 200 | 10 |
| 19. | மதுரை | 2,00,000 | 200 | 10 |
| 20. | மதுரை மாநகர் | 50,000 | 200 | 10 |
| 21. | தேனி | 50,000 | 200 | 10 |
| 22. | ராமநாதபுரம் | 50,000 | 200 | 10 |
| 23. | சிவகங்கை | 1,00,000 | 200 | 10 |
| 24. | திண்டுக்கல் | 1,00,000 | 200 | 10 |
| 25. | விருதுநகர் | 50,000 | 150 | 10 |
| 26. | திருநெல்வேலி | 2,00,000 | 200 | 20 |
| 27. | துாத்துக்குடி | 2,00,000 | 200 | 20 |
| 28. | கன்னியாகுமரி | 2,00,000 | 200 | 10 |
| 29. | நீலகிரி | 50,000 | 100 | 10 |
| 30. | கோவைதெற்கு | 1,00,000 | 150 | 10 |
| 31. | கோவைவடக்கு | 1,00,000 | 150 | 10 |
| 32. | கோவை மாநகர் | 1,00,000 | 150 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| 33. | திருப்பூர் | 1,00,000 | 150 | 10 |
| 34. | உடுமலைபேட்டை | 50,000 | 150 | 10 |
| 35. | சேலம் | 50,000 | 200 | 10 |
| 36. | மேட்டூர் | 1,00,000 | 200 | 10 |
| 37. | ஈரோடு | 1,00,000 | 200 | 10 |
| 38. | கோபி | 1,00,000 | 200 | 10 |
| 39. | நாமக்கல் | 50,000 | 200 | 10 |
| 40. | வடசென்னை அனல் | 1,00,000 | 100 | 25 |
| 41. | எண்ணூர் | 1,00,000 | 100 | 25 |
| 42. | மேட்டூர் அனல் | 1,00,000 | 100 | 10 |
| 43. | தூத்துக்குடி அனல் | 2,00,000 | 100 | 10 |
| 44. | ஈரோடுஉற்பத்தி | 50,000 | 100 | 5 |
| 45. | காடம்பாறை | 25,000 | 50 | 5 |
| 46. | குந்தா உற்பத்தி | 25,000 | 50 | 5 |
| 47. | நெல்லைஉற்பத்தி | 25,000 | 50 | 5 |
| 48. | காற்றாலைபண்ணை | 10,000 | 20 | 5 |
| 49. | பொதுகட்டுமான ம் | 50,000 | 200 | 25 |
| 50. | தலைமையகம் | 50.000 | 20 | 5 |
| 51. | கள்ளக்குறிச்சி | 1,00,000 | 250 | 25 |
| | **மொத்தம்** | **64,85,000** | **11540** | **1250** |

## தோழர் பி.சி.வேலாயுதம் நினைவு கல்வி உதவி நிதி

மறைந்ததோழர் பி.சி.வி நினைவாக வருடம் தோறும் மின்வாரியத்தில் பனியாற்றும் ஊழியர்களின் குழந்தைகளில் (10ம் வகுப்பு மற்றும் +2) தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் பிள்ளைகளுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்ற அடிப்படையில் தோழர் பி.சி.வி கல்வி உதவி நிதி வழங்குவது அனைவரும் அறிந்ததே.

அதே போல் இந்த ஆண்டு (2012-2013) 10ம் வகுப்பு, +2 மதிப்பெண் பட்டியலை வாங்கி கிளைச் செயலாளர் கையொப்பமிட்டு ஜூலை 15க்குள் மாநில மைய்யத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.